**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
Issue DOI: https://doi.org/10.63300/tirjts06012026
https://ngmtamil.in/

# Kadar Tribes

**B. Anjali[1*], S. Jamuna[2],**
[1]Doctoral Research Scholar, Department of Tamil, N.G.M. College, Pollachi.
[2]Research Supervisor, Assistant Professor, Department of Tamil, N.G.M. College, Pollachi.
[*]Corresponding Author E-mail: anjali2bha@gmail.com.

**Article Info**
Received on 22-April-2026, Revised on 25-April-2026, Accepted on 29-April-2026, Published on 01-May-2026

## ABSTRACT

When documenting the history of marginalized communities, traditional historical evidence is often scarce. This is because a group whose cultural identities have been stripped away or denied is unlikely to possess formal historical records. However, if a group or clan is dispersed across various locations within a specific territory, evidence unavailable in one area may be found in another. Furthermore, oral traditions preserve data regarding a community's antiquity, occupations, and culture. There is an intrinsic link between the history of a community and its folklore-which encompasses oral traditions and customs; in essence, folklore constitutes an integral part of a community's history. These elements are inextricably intertwined. Evidence of a community's socio-cultural history is found within its oral traditions, rituals, customs, and material culture. The objective of this study is to document and disseminate the cultural identity of the Kadar tribe as a historical record.

***KEYWORDS:*** *Culture, Kadar, Rituals, Kuriyar Kutti, Lifestyle.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

# காடர் பழங்குடிகள்

[1]**பா.அஞ்சலி,** முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த் துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.
[2]**செ.ஜமுனா,** நெறியாளர், உதவிப் பேராசிரியர்,
தமிழ்த் துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம் :**

அடித்தள மக்கள் பிரிவின் வரலாற்றை எழுதும் பொழுது மரபு வழிச் சான்றுகள் ஒரளவிற்கே கிடைக்கின்றன. ஏனெனில் பண்பாட்டு அடையாளங்கள் பறிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் வாழ்ந்த ஒரு குழுவானது, வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டிருக்க இயலாது. அதே நேரத்தில் ஒரு குழு அல்லது குலம் குறிப்பிட்ட நிலப்பரப்பில் பல்வேறு இடங்களில் பரவி வாழ்ந்தால் ஒரிடத்தில் கிட்டாத சான்றுகள் மற்றொரு இடத்தில் கிட்டும் வாய்ப்பு உண்டு. மேலும் ஒரு சமூகத்தின் தொன்மை, தொழில், பண்பாடு ஆகியன குறித்த தரவுகளை வாய்மொழி வழக்காறுகள் கொண்டுள்ளன. ஓர் இனத்தின் வரலாறும் வழக்காறுகளை உள்ளடக்கிய நாட்டார் வழக்காறும் ஒன்றோடொன்று நெருங்கிய பிணைப்பைக் கொண்டவை. சுருங்கக் கூறின் இன வரலாற்றின் ஒரு அங்கம் நாட்டார் வழக்காறுதான். இவையிரண்டும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. ஓர் இனத்தின் வாய்மொழி வழக்காறுகளிலும், சடங்குகளிலும், பழக்க வழக்கங்கள் மற்றும் புழங்கு பொருட்களிலும் அதன் சமூகப் பண்பாட்டு வரலாற்றுக்கானச் சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாய்வின் நோக்கம் காடர் இன மக்களின் பண்பாட்டு அடையாளங்களை வரலாற்று பதிவாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதே ஆகும்.

**திறவுச்சொற்கள் :**பண்பாடு, காடர், சடங்குகள், குரியார் குட்டி, வாழ்வியல்.

**முன்னுரை :**

வாழ்வியல் என்பது மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கூறும் அறிவியல் ஆகும். இது வெறும் தத்துவக் கருத்தாக இல்லாமல், தினசரி வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறைகளை கொண்டதாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் மனித சமுதாயம் சிறப்புடன் வாழத் தேவையான பல வாழ்வியல் நெறிகளை வகுத்துக் கொடுத்துள்ளன. எடுத்துக்காட்டாக, திருக்குறள் மனிதன் தன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய முழுமையான வாழ்வியல் சிந்தனைகளை உள்ளடக்கிய ஒரு உன்னத வழிகாட்டியாகும். மனிதன் எந்த வகையில் சிந்திக்கிறானோ , அந்த வகையிலேயே அவனது வாழ்க்கை அமைந்து விடுகிறது. எண்ணங்கள் வெறும் மனதில் தோன்றும் கருத்துக்கள் அல்ல. அவை மனிதனின் செயல்களையும், பழக்கங்களையும், வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும் உருவாக்குகின்றன. மனித வாழ்க்கையின் அடிப்படை நோக்கம் மகிழ்ச்சியான வாழ்க்கை. அந்த ஆனந்தம் பொருளாதார வசதிகள் மூலம் மட்டும் கிடைப்பதில்லை.

மன அமைதி, சீரான சிந்தனை மற்றும் ஒழுக்கமான வாழ்க்கை, கலாச்சாரம் மூலம் மட்டுமே பெற முடியும் என்பதனை இக்கட்டுரை வழி அறியலாம்.

**காடர்கள் குடியிருப்பு :**

காடர் பழங்குடியினர் கேரளாவிலும் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கேரள அரசு இவர்களுக்கெனக் காலனி அமைத்துக் கொடுத்து தனி இடம் ஒதுக்கி அவர்களுக்கென வீடுகள் அமைத்துக் கொடுத்திருக்கிறது. தற்பொழுது இவர்கள் வாழும் குடியிருப்பு பகுதி “காலனி” என்று பெயர் பெறுகின்றது. காலனி என்பது ஆங்கிலச் சொல்லாகும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள ஆனைமலையின் பிரமன் கடவு, பன்னிக்குழி, சவமலை, நெடுங்குன்றம்,கருங்குன்றம், அயன் குளம், வாகைமலை ஆகிய இடங்களிலும் இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்கின்றனர். இவையன்றி பரம்பிக்குளம் பகுதியில் எர்த்டேம், குரியார் குட்டி போன்ற பகுதிகளிலும் குடி கொண்டுள்ளனர்.

**காடர் பூர்வீகம் :**

“ காடர் பழங்குடிகள் கேரளாவிலும் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கொச்சியின் கிழக்குப் பகுதியிலுள்ள ஏல மலைப் பகுதி, தென் கேரள மலைப்பகுதி ஆகியவற்றிலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆனைமலையின் பிரமன் கடவு, பன்னிக்குழி,சவமலை, நெடுங்குன்றம், கருங்குன்றம், அயன் குளம், வாகை மலை ஆகிய இடங்களிலும் இவர்கள் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனா”1;. (ப -59 ) என வாழ்வியல் களஞ்சியம் தொகுதி 7 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

முற்காலத்தில் கேரளாவில் திருக்கொச்சி என்ற இடத்தில் வாழ்ந்;திருக்கின்றனர். காலப்போக்கில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தொழில் வளர்ச்சி தங்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமலும் போன காரணத்தால் பல்வேறு பிரிவினராகப் பிரிந்து சென்றனர். பிரிந்தவர்கள் மங்கல டாம், தழுகக்கல்,அட்டப்பாடி, தேக்கடி, குரியார் குட்டி போன்ற இடங்களுக்குச் சென்று அந்தந்த பகுதிகளைத் தங்கள் பூர்வீகமாக்கிக் கொண்டு வாழ்கின்றனர்.

காடர் என்பதற்கு “ஆனைமலையின்கண் வசிக்கும் ஒருவகைக் காட்டுச் சாதியர் இவர்களுக்கு வேட்டையாடுதல் தொழில் அவற்றுள் யானை வேட்டை முக்கியம் கொச்சி சமஸ்தானத்தருகில் குன்றுகளில் வசிக்கும் சாதியர்.” (ப - 485 ) என்று விளக்கம் தருகிறது அபிதான சிந்தாமணி. கேரள மலைப்பகுதிகளில் பெரும்பான்மையான பகுதிகளில் இவ்வினத்தவர்கள் வாழ்கின்றனர். எனினும் இவர்கள் பூர்வீகம் தமிழகமே.

“காடர் இருளர் பளியர் முதுவர் போன்ற பழங்குடியினரும் தங்கள் பூர்வீகமாகத் தமிழகத்தையே குறிப்பிடுகின்றார்கள”2;. ( தமிழகப் பழங்குடிகள் ப – 50 ) என்னும் கருத்து இங்கு சுட்டத்தக்கது.

**காடர் பெயர்காரணம் :**

காடு எனும் சொல்லின் அடிப்படையில் பிறந்ததே இவர்கள் இனக்குழுப் பெயரான காடர் என்பதாகும். மலைகளால் சூழப்பட்ட அடர்ந்த காடுகளுக்கிடையே இவர்கள் வாழ்ந்து வருவதால் காரணப் பெயராகக் காடர் என பெயர் அமைந்திருக்கலாம் என ஊகித்து அறிய முடிகிறது.

“ஆனைமலைக்கண் வசிக்கும் ஒருவகைக் காட்டுச் சாதியர் காடர். காடர் என்றால் காட்டில் வசிப்பவர் என்று பொருள். காடர் என்பது காடன் என்ற வார்த்தையின் பன்மை. ஆகவே காடர்கள் தமிழ்நாட்டின் பூர்வகுடிகள் என்பதில் ஐயமில்லை”3(தமிழகப் பழங்குடிகள் ப-50) வேங்கடராமன் குறிப்பிடுகிறார்.

**காடர்; மொழி :**

தமிழ் கன்னடப் பிரிவைச் சேர்ந்த ஒரு தென் திராவிட மொழியாகும். இந்தியாவில் தமிழ்நாடு கேரள ஆகிய மாநிலங்களில் பேசப்பட்டு வரும் இம்மொழிஇ ஏறத்தாள காடர் இன மக்கள் 2.265 பேர்களால் பேசப்படுகிறது. இது காடர், காடிர் என்று அழைக்கப்படும் என்கின்றது . www.taWikipedia.org

காடர் பேசும் மொழி – “ஆல் அலப்பு” என்பர். அவர்களின் மொழி குறித்தும் வாழ்க்கை முறை பற்றியும் எந்த எழுத்துக் குறிப்புகளும் அவர்களிடம் இல்லை என்று தின மலர் தமிழ் செய்தித் தாளில் குறிப்பிடப்படுகின்றது.

காடர் இன மக்கள் தமிழும் மலையாளமும் கலந்த ஒரு திருந்தாத மொழியினையேப் பேசி வருகின்றனர். எட்கர் தர்ஸ்டன் “காடர் திருந்தாத தமிழும் மலையாளமும் கலந்த ஒரு கலப்பு மொழியினைப் பேசுகின்றனர்”4 ( தென்னிந்திய குலங்களும் குடிகளும் ப-12 ) எனக் குறிப்பிடுகிற “காடர்கள் பேசுவது மலையாளம் கலந்த தமிழின் கிளைமொழி எனக் கருதப்படுகிறது. அண்மைக் கால மொழியியல் ஆய்வின்படி இவர்கள் பேசுவது ஒரு தனி மொழி என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.”5 (வாழ்வியல் களஞ்சியம் தொகுதி -7 ப-59)

மலை அடிவாரங்களில் வாழும் மலைவாழ் மக்கள் மற்ற இனத்தோடு கலந்து பழகும் வாய்ப்பு ஏற்படுவதால் அவர்கள் மொழியில் இப்பொழுது அதிகமாக தமிழ்ச் சொற்கள் கலந்துள்ளன. இவர்கள் பேசும் மொழிக்கு வரிவடிவம் கிடையாது. “ இவர்கள் மலையாளச் சொற்கள் நிறைந்த கொச்சை தமிழைப் பேசுகின்றனர்.”6 ( பழங்குடிகள் ப – 104 )

**கைவினைப் பொருட்கள் :**

கேரள அரசு பழங்குடியின மக்கள் வாழ்வினை மேம்படுத்த, படிக்காத பெண்களும் பலன் பெறும் வகையில், காடுகளில் வீனாக கிடக்கும் மூங்கில்களைக் பயன் படுத்தி, காடர் இன பெண்களுக்கு கைவினைப் பொருட்கள் செய்வதற்கு அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று ஒரு மாத காலம் பயிர்ச்சி வழங்கி அவற்றினை செய்வதற்கு தேவையான கருவிகளையும் கொடுத்து அவர்களுக்கு தொழில் அமைத்து கொடுத்துள்ளனர். அவர்கள் செய்யக்கூடிய பொருட்களை வாங்கி இவர்கள் Sவிற்பனை செய்கின்றனர். அதற்கான ஊதியத்தை அவர்களுக்கு வழங்குகின்றனர். அப்பொருட்கள் தொலைபேசி வைப்பதற்கான ஆதரவு கருவி, அலங்கார பூக்கள், அலங்கார ஜாடி, தொப்பி , மேசை அலங்காரப் பொருளான கப்பல்,விசிரி போன்றவைகள் அடங்கும்.

**பூப்புச் சடங்கு முறை :**

ஒரு பெண் வயது வந்தவுடன் அவளின் வீட்டிற்கு முன் தாய் மாமன் முழுமையான ஒரு மூங்கிலினை ஊன்றி. அதனை சுற்றிலும் வட்ட வடிவிலான குடிசையினை, மூங்கில் தப்பை கொண்டு கட்டுகின்றார். குடிலின் உச்சியில் பித்தளைக் குடத்தினுள் காசுகளை போட்டு கட்டி வைப்பர். அவற்றில் மஞ்சள் குங்குமம் வைப்பர். ஏழு நாள் வரை வயது வந்த பெண் அந்த குடினுள்ளேயே இருக்க வேண்டும். ஏழா நாள் சீர் செய்கின்றனர். அந்நாளில் அந்த குடிசையை பிரிக்கின்றனர். அதன் பின் வயது வந்த பெண்ணிற்கு முதலில் தாய் மாமன் மஞ்சள் நீர் ஊற்றுவாபர். அதன் பின் அத்தை ஊற்றுகிறார் அதன் பின்னே தாய் தந்தைக்கு உரிமை வழங்கப்படுகிறது. நீர் ஊற்றி முடிந்த உடன் ஏழு தட்டுகளில் சீர் வரிசை வைத்து சீர் செய்து (குடிலினுள்) வீட்டினுள் விடுகின்றனர்.

சங்க பாடல்களில் பெண்ணின் பூப்பு நிகழ்வு குறித்த செய்திகள் ஒரு சில காணப்படுகின்றன. புறநானூற்று காஞ்சித்துறைப் பாடல் ஒன்று இதற்கு சான்றுரைக்கிறது. இதில் பெயர் குறிப்பிடப்படாத ஒரு மறக்குடிச் சிற்றரசனின் மகள் பூப்படைந்தால் பிறரால் காண்பதற்கு அரியவளாக, பெண்மை நிரம்பிய பொலிவோடு நன்கு வெளுத்து மடித்த துகில் போல அகிலின் நறும்புகை கமழும் கபில நிற வீட்டிற்குள் மனைச் செறிக்கப்பட்டாள் என்ற செய்தி இடம் பெற்றுள்ளது. இதனை

“பாரி பறம்பின் பனிச்சுனை போல
கண்டற் கரியளாகி மாண்ட
பெண்மை நிறைந்த பொலிவோடு மண்ணிய
துகில்விரி கடுப்ப நுடங்கி தண்ணென
அகில் ஆர் நறும்புகை சென்றடங்கிய

கபில நெடுநகர்க் கமழும் நாற்றமொடு

மனைச் செறிந்தனளே வாணுதல் (புறம். 337:6-12) 7

என்ற பாடல் மூலம் அறியலாம். இதில் மனைச் செறிந்தனளே என்பது சடங்கு நிகழ்ச்சிகள் முடிந்து பெண்ணை வீட்டினுள் அழைத்துச் செல்லும் நிகழ்ச்சியினைச் சுட்டுகிறது.

**காதணி விழா :**

இந்து மதத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குப் பால் வேறுபாடின்றிக் காதுகளில் துளையிட்டு அணிகலன் அணியும் வழக்கம் உள்ளது. இதையே காதுகுத்தி கம்மல் போடுதல் என்று கூறுகின்றனர். பிறப்புச் சடங்கில் காதுகுத்தின் போது தாய்மாமன் ஒப்புதல் நாள் குறிக்கப்படுகிறது. உள்ளுர் அல்லது வெளியூரிலிருந்து வரும் தாய்மாமன் காதுகுத்து நிகழ்விற்கு நேரடியாக வீட்டிற்குள் நுழைவதில்லை. அந்த வீட்டிலிருந்து சற்று தூரத்தில் தெருமுனையில் தாய்மாமன் வந்து நின்று கொள்வார். அவர் வந்த செய்தியை அவ்வூர் மக்களில் யாராவது ஒருவர் காது குத்துவிழா நிகழும் வீட்டிற்குத் தெரிவிப்பார். இதை அக்குடும்பத்தார் அல்லது உற்றார் உறவினர்களுடன் சென்று தப்பு வாத்தியம் அடித்து எல்லையில் நிற்கும் தாய்மாமன் அழைத்து வரப்படுவார். பின் ஆரத்தி எடுத்து வீட்டிற்குள் அழைத்து வரப்படுவார். காது குத்த இருக்கும் குழந்தையை அவரது மடியில் கிழக்கு பார்த்து அமரச் செய்வார். அந்த ஊரில் அனுபவம் உள்ள வயதான பெரியவர் ஒருவரை அழைத்துக் காது குத்தச் சொல்வார்கள். குழந்தைக்குத் காது குத்தியவுடன் தாய்மாமன் கொண்டுவந்த காதணி அணிவிக்கப்படும். இவ்வாறு காது குத்து முடிந்த பின் அக்குழந்தை தாய் மாமன் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்று மாமனிடம் பணம் பெறுகின்றார். அதன் பின் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்படுகிறது. சிலர் சைவ உணவுகளை உண்கின்றனர். முதுவர் இன மக்களும் காடர் இன மக்களும் அவர்கள் ஊரின் உள்ளேயே இருக்கக் கூடிய கோயிலில் அவர்கள் மட்டும் குடும்பமாக சென்று காது குத்திக் கொள்கின்றனர் அதனை சிறப்பாக செய்யும் வழக்கம் அவர்களிடம் இல்லை.

**திருமண முறை :**

காடர் இனத்தைச் சேர்ந்த ஓர் இளைஞனுடைய எண்ணம் திருமணத்தை நாடுமானால் அவன் தான் விரும்பும் ஒருத்தி இருக்கும் சிற்றூருக்குச் சென்று அங்கு ஓர் ஆண்டு பணியாற்றி அவளுக்குப் பரிசுத் தொகையை அளிப்பான். மண நாளன்று காடரினத்தைச் சேர்ந்தவர்களுக்கு மணமகனின் பெற்றோர் சோறும் ஆடு கோழி ஆகியவற்றின் கறியும் கலந்த விருந்திடுவர்.மணமக்கள் மணமகள் வீட்டுக்கு வெளியே மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் நிற்பர். அப்பொழுது மணமகளின் தாயோ உடன் பிறந்தவளோ மணமகள் கழுத்தில் தங்கம் அல்லது வெள்ளியாலான தாலியினை அணிவிப்பர். மணமகளின் தந்தை மணமகன் தலையில் அப்போது தலைப்பாகை ஒன்றினைக் கட்டி விடுவான். மணமக்கள் தங்கள் வலக் கையின் சிறுவிரல்களை இணைத்தவர்களாகப் பந்தலைச் சுற்றி வருவர்.

அதன் பின் காடர்களால் பின்னப்பட்ட ஒரு பிரம்புப் பாயில் அமர்ந்து அவர்கள் வெற்றிலை மாற்றிக் கொள்வா”8. என்று க.இரத்தனம் (தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் ப-26) குறிப்பிடுகிறார்.

பல மனைவி மணம் காமக்கிழத்தியர் மணம் ஆகியவற்றோடு மணப் பெண் வீட்டிற்குப் பணி செய்து மணமகளை மணந்து கொள்ளும் முறையும் உண்டு. காடர் மணமகன் திருமணத்தன்றோ அல்லது அதற்கு முன்போ வேலைப்பாடு மிகுந்த சீப்பை பரிசாக அளிக்கிறான் காடர் பெண்கள் இதனைத் தாலிக்குச் சமமாக மதிக்கின்றனர். கணவனோ அல்லது மனைவியோ தாங்கள் வேண்டும் போது பிரியலாம். கற்பு தவறிய பெண்களைக் காடர்கள் வெறுப்பதில்லை. மணவிலக்கு விதவை மணம் ஆகியவை காடர்களிடம் உண்டு”9. என்பதனை இரா.முருகன் (சங்கப் பாக்களில் தொல்குடிக் கூறுகள் பக்-105-106) குறிப்பிடுகிறார்.

குரியார் குட்டி, எர்த்டேம் பகுதியில் வசிக்கும் காடர்களிடம் கேட்டதற்கு. நாங்கள் சொந்ததிற்குள்ளேயே பெண் எடுத்துக் கொள்வோம் வெளி ஆட்களுக்கு பெண் கொடுக்க மாட்டோம். திருமணம் முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. முதலில் பெண் வீட்டில் மூங்கில் ஊன்றி பந்தல் இட்டு பெண் வீட்டில்தான் திருமணம் நடைபெறும் ஆனால் தற்பொழுது வசதிக்கு தகுந்தார் போல் நடத்துகின்றனர் வசதி உள்ளவர்கள் விருப்பப்பட்ட கோவிலில் திருமணம் செய்கின்றனர் சிலர் பெண்வீட்டிலேயே திருமணம்ள செய்கின்றனர். சீர் செய்வதில் கட்டாயம் எதுவும் இல்லை பெண் வீட்டில் விருப்பப் பட்டதை செய்யலாம் என்கின்றனர். வேற்று இனத்தில் காதல் திருமணம் செய்து கொள்ளும் ஆட்களை பெறும்பான்மையாக ஏற்றுக் கொள்வதில்லை. இவர்களிடம் பலதார மணம் இல்லை என்கின்றனர்.

**இறப்பு சடங்கு :**

இறந்தவர்களின் உடலை எடுத்து செல்லும் முன்னறே பக்கத்து வீட்டில் சமையல் செய்து வைக்கின்றனர். பிணத்தை எடுத்து சென்று அடக்கம் செய்து விட்டு நேராக ஆற்றிற்கு சென்று, குளித்து விட்டுதான் வீட்டிற்கு வருவார்களாம். வந்ததும் அடுப்பு கரியை உரசி பொட்டு வைக்கின்றனர். அதன் பின்பே முறத்தில் சாதம் வைத்து பலா இலையை பீப்பி போன்று ஏழு பீப்பி செய்து. அந்த சாதத்தின் மேல் வைத்து குழம்பு,ரசம், கூட்டு,பொரியல் என அவற்றினுள் இட்டு படைக்கின்றனர். இவற்றிற்கு எதும் காரணம் உண்டா என கேட்டால் சொல்ல தெரியவில்லை முன்னோர்கள் பின்பற்றிய சாங்கியத்தை நாங்களும் கடைப்பிடிக்கின்றோம் என்கின்றனர். தேங்காய் உடைத்து, பத்தி பற்ற வைத்து, தண்ணிர் தெளித்து, சாமி கும்பிடுகின்றனர். அதன் பிறகு வந்தவர்களுக்கு உணவு வழங்குகின்றனர். படையலில் வைக்கப்பட்ட உணவை அவ்வீட்டில் உள்ளோர் மட்டுமே உண்கின்றனர்.

**பதினாறாம் நாள் காரியம் :**

இறந்தவர்களுக்கு பதினாறாம் நாள் காரியம் செய்ய காடர் இனத்தை சார்ந்த அனைவரும் பதினைந்தாம் நாள் இரவே காட்டிற்குள் ஒரு இடத்தை தேர்வு செய்து அவ்விடத்தை சுத்தம் செய்து தங்குகின்றனர். அங்கு செல்லும் போதே சாமி கும்பிட சமைக்கத் தேவையான பொருட்களை கடைகளில் இருந்து வாங்கி செல்கின்றனர். வாங்கி சென்ற பொருட்களை பந்தல் அமைத்து அவற்றில் வைக்கின்றனர். அங்கேயே சமைக்கின்றனர். வீடுகளில் இருந்து பொருட்களை எடுத்து செல்வது இல்லை. நெருப்பினை மூட்டி இரவு முழுவதும் இவர்களின் இசைக்கருவிகளை இசைத்து ஆடல் பாடலுடன் இரவை கழித்து விட்டு. மறு நாள் உணவு சமைத்து, படையல் இட்டு, சாமி கும்பிட்டு விட்டு. அனைவரும் உணவு உண்கின்றனர். மிச்சம் மீதி உள்ள பொருட்களை வீட்டிற்கு எடுத்து செல்லாமல் அங்கேயே போட்டு விட்டு அன்று மாலை வீடு திரும்புகின்றனர் அதன் பின் ஒரு வருடம் ஆன பிறகே சாமி கும்பிடுகின்றனர்.

**முடிவுரை :**

காடர் இன மக்கள் வாழ்க்கையில் நிகழக்கூடிய சடங்குகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. காடர்களின் சடங்குகளின் தனி தன்மை, மற்றும் அவர்களுக்கும் பிற இனத்தவர்களுக்கும் உள்ள சடங்கின் ஒற்றுமைகள், மற்றும் அவர்களின் பூர்வீகம், மற்றும் அவர்களின் பெயர் காரணங்கள், அவர்கள் பேசக்கூடிய மொழிகள், மற்றும் முன்னோர் சடங்குகளுக்கும் தற்போது இவர்களின் சடங்கின் மாற்றங்களும் இவர்களின் பழக்க வழக்க சடங்குகள் குறித்தும் விளக்கப் பட்டுள்ளது.

**துணை நூல் பட்டியல் : (References)**

[1]. Bakthavatsala Bharathi, C. *Tribes of Tamil Nadu*. Manivasagar Pathippagam, 1988.

[2]. Balasubramanian, Ku. Ve., and T. P. Parimanam, editors. *Purananuru*. Pavai Printers, 2004.

[3]. Balusamy, Na., editor. *Encyclopedia of Vazhviyal (Lifestyle Encyclopedia)*. Vol. 1, Tamil University, Maruthonri Press, 1988.

[4]. Murugan, R. *Elements of Indigenous Tribes in Sangam Poetry*. Selvi Pathippagam, 2003.

[5]. Sakthivel, S. *Tribes*. Century Book House, 1973.

[6]. Thurston, Edgar. *Castes and Tribes of Southern India*. Translated by K. Rathnam, vol. 3, Tamil University, Maruthonri Press, 1987.

[7]. “Kadar.” *Wikipedia: The Free Encyclopedia*, Wikimedia Foundation, ta.wikipedia.org. Accessed 8 July 2026.